மின்னஞ்சல் மூலம்

# தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை – 18

அனுப்புநர்:

திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப.,
ஆணையர்,
தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின்
தேர்தல் ஆணையம்,
273, அண்ணாசாலை, தேனாம்பேட்டை,
சென்னை – 600 018.

பெறுநர்:

1. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் / மாநில தேர்தல் அலுவலர்.
2. இதர செயற்பதிவாளர்கள் / மாநில தேர்தல் அலுவலர்கள்.

ந.க. 252/2023/கூ.தே.1 நாள் : 13.02.2023

ஐயா / அம்மையீர்,

பொருள் : கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள் 2023 – நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் தலைவர் / துணைத்தலைவர் – தேர்தல் நடவடிக்கைகளை Whatsapp மூலம் கண்காணித்தல் – அலுவல் ரீதியான வாட்ஸ் ஆப் குழு (Whatsapp Group) உருவாக்குதல் - தொடர்பாக.

****

கடந்த 2018 – ஒட்டு மொத்த தேர்தலில் முதற்கட்டம் முதல் நிலையில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்களின் 5 ஆண்டு பதவிக்காலம் 02.04.2023-ல் முடிவடைய உள்ள 4,221 கூட்டுறவுச் சங்கங்கள் இவை தவிர இதர வகையில் அதாவது புதிதாகப் பதிவு செய்யப்பட்ட 619 கூட்டுறவுச் சங்கங்கள், செலாட்சியர் பொறுப்பு என மொத்தம் 6,993 தொடக்கக் கூட்டுறவு சங்கங்களின் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் தலைவர்/துணைத்தலைவர் தேர்தலுக்கான முன்னேற்பாடுகளை ஆணையம் மேற்கொண்டு வருகிறது.

அவ்வகையில் இக்கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் நடவடிக்கையில் பங்கேற்கும் அனைத்து அலுவலர்களும் தேர்தலினை சுதந்திரமாகவும், நியாயமாகவும் மற்றும் வெளிப்படைத் தன்மையுடன் நடத்துவதற்கு ஏதுவாக ஆணையத்தால் அவ்வப்போது வழங்கப்படும் அறிவுரைகள் மற்றும் தெளிவுரைகளை தேர்தலில் ஈடுபடும் அனைத்து அலுவலர்கள் உடனுக்குடன் தெரிந்து கொள்ளவும் மேலும் தேர்தல் நடவடிக்கைகளை கண்காணித்திடவும் ஆணையத்தில் அலுவல் ரீதியான (Official Whatsapp Group) வாட்ஸ்ஆப் குழு "COOPERATIVE SOCIETIES ELECTIONS-2023" என்ற பெயரில் உருவாக்கப்பட்டுள்ளது.

இவ்வாட்ஸ்ஆப் குழுவில் தேர்தல் சம்பந்தமாக ஆணையத்தால் நியமனம் செய்யப்பட்டுள்ள மாநிலத் தேர்தல் அலுவலர்கள் மற்றும் இவர்களின் நிர்வாகக் கட்டுபாட்டிற்குட்பட்ட மாவட்ட தேர்தல் அலுவலர்கள், பார்வையாளர்கள், ஒருங்கினைப்பாளர்கள் என்ற வகையில் அனைத்து மண்டலங்களின் இணைப்பதிவாளர்கள், ஆணையர், செயலாளர் மற்றும் ஆணையத்தின் அலுவலர்கள் அனைவரும் இக்குழுவில் இடம்பெறுவர்.

மேற்காணும் அனைத்து அலுவலர்களின் தொடர்பு எண்கள் (Contact Number) ஆணையத்தின் வலைத்தளத்தில் (www.coopelection.tn.gov.in) பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

வாட்ஸ் ஆப் பயன்படுத்துதலில் சில தெளிவுரைகள் பின்வருமாறு:

1. அலுவல் ரீதியான இக்குழுவில் மிகக்கவனமுடன் பதிவுகள் இடம்பெற வேண்டும்.
2. கூட்டுறவுத் தேர்தல் 2023 தொடர்பான பதிவுகள் மட்டுமே இடம்பெற வேண்டும். இதர வகையிலான பதிவுகள் கட்டாயம் பதிவிடக் கூடாது.
3. வெறுமனே Good Morning, Good afternoon போன்றவை மட்டுமே சொல்லுதல் மற்றும் தேர்தல் தொடர்பில்லாத புகைப்படங்கள் அனுப்புதல் போன்றவை முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும்.
4. தேர்தல் தொடர்பில்லாத ' "Forward Message" கட்டாயம் தவிர்க்கப்பட வேண்டும்.

(ஒம்)/-
ஆணையர்

ஆணையருக்காக

நகல்

1) அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்கள்
2) அனைத்து பார்வையாளர்கள்
3) அனைத்து மண்டலங்களின் இணைப்பதிவாளர்கள்
4) கூ.தே பிரிவு 3
5) இருப்பு கோப்பு-2023